**தலைப்பு 256 – கம்பஹா மாவட்டச் செயலகத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 12 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கப் பேணப்படுதல், தயாரிக்கப்படல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,178.80 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,164.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 14.50 மில்லியன் அதாவது 1.23 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,011.80 | 997.43 | 14.37 | 1.42 |
| மூலதனம் | 167.00 | 166.87 | 0.13 | 0.08 |
| மொத்தம் | 1,178.80 | 1,164.30 | 14.50 | 1.23 |

**(ஆ) ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 28 ஏனைய அமைச்சுகள் மற்றும் 16 திணைக்களங்களினால் ரூபா 4,831.77 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 4,391.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 440.32 மில்லியன் அதாவது 9 சதவீத நிதி சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75.00 | 74.99 | 60.00 | 68.39 | 300.00 | 238.01 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 735.21 மில்லியனாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0061/000 | 0.48 |
| 6000/0000/00/0002/0079/000 | 0.87 |
| 6000/0000/00/0013/0049/000 | 58.20 |
| 6000/0000/00/0016/0031/000 | 240.00 |
| 6000/0000/00/0017/0010/000 | 433.15 |
| 6000/0000/00/0018/0039/000 | 2.51 |
| | **735.21** |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

மாவட்டச் செயலகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்குட்பட்ட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதியளவானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.1.1 ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள், அலுவலகங்கள் என்பவற்றால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஓய்வூதியக் கிளை**

(i) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 11 பிரதேச செயலகங்களது 1708 ஓய்வூதியக் கோவைகளுக்கான ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) ஓய்வூதியக் கோவைகள் அற்ற 978 பேருக்கு 8 பிரதேச செயலகங்களால் ஓய்வூதியம் வழங்கப்பட்டவாறிருந்தது.

(iii) ஓய்வூதியம் பெறுபவர் அல்லது விதவை அல்லது வேறெந்த விதத்திலாவது ஓய்வூதியத்தை பெற்றவாறிருக்கும் நபர் ஒருவர் இறக்குமிடத்து அந்நபரது தகவல்கள் கூடிய விரைவில் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட வேண்டும். எனினும், மஹர பிரதேச செயலகத்திற்கு அவ்வாறான 26 ஓய்வூதியகாரர்களது தகவல்களை வழங்குவதற்கு 1 முதல் 27 மாதங்கள் வரையிலான தாமதமும் மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் 18 ஓய்வூதியகாரர்கள் சம்பந்தமாக 27 நாட்கள் முதல் 1 ஆண்டு வரையிலான தாமதமும் ஏற்பட்டிருந்தது.

(iv) வத்தளை பிரதேச செயலக ஓய்வூதியகாரர்கள் மரணமடைந்தமை தொடர்பாக முறைப்படி அறிவிக்கப்படாததால் அவர்கள் இறந்த பின்னரும் அவர்களது வங்கிக் கணக்கிற்கு 09 சந்தர்ப்பங்களில் ரூபா 1,550,665 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(v) மினுவாங்கொடை பிரதேச செயலக ஓய்வூதியம் பெறுபவர் ஒருவர் 2015 நவம்பர் 15 ஆந் திகதி மரணமடைந்திருந்தார். அவர் பொருட்டு 2011 டிசெம்பர் 21 முதல் 2014 செப்டெம்பர் 30 வரை ரூபா 173,995 கூட்டுத் தொகை சம்பளமும் வாழ்க்கைச் செலவினப் படியுமாக வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகை 2017 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவுமில்லை.

(vi) களணி பிரதேச செயலகத்தின் ஓய்வூதியகாரர்களது வதிவிடச் சான்றிதழ் முறைப்படி பெறப்படாமை மற்றும் மரணமடைதல் தொடர்பாக முறைப்படி அறிவிக்கப்பட்டிராமை காரணமாக 2014, 2015 ஆம் ஆண்டுகளில் மரணமடைந்த 04 ஓய்வூதியகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஓய்வூதியம் ரூபா 107,303 ஆகும்.

(vii) மஹர பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கமின்றி மற்றும் தவறான அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிட்டும் தரவு முறைமையினூடாக மூவர் ஓய்வூதியம் பெற்றிருந்த தகவல்கள் இருந்தன.

(viii) கம்பஹா பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் தமது பிரிவில் வசிக்கும் ஓய்வூதியகாரர்கள் மரணமடைந்தமை தொடர்பாக முறைப்படி பிரதேச செயலகத்திற்கு அறிவிக்காமையால் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் மரணமடைந்த 02 ஓய்வூதியகாரர்களுக்கு ரூபா 49,861 அவர்களது வங்கிக் கணக்கிலிடப்பட்டிருந்தது. குறித்த தொகை ATM இயந்திரத்தினூடாகப் பெறப்பட்டிருந்தமையால், அதனை அறவிடுவதன் பொருட்டுப் பொறுப்பான நபரைக் கண்டுபிடிக்க இயலாது நி.பி 104 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

(ix) கம்பஹா பிரதேச செயலகத்தில் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் மரணமடைந்த 31 ஓய்வூதியகாரர்கள் தொடர்பான தகவல்கள் கிராம உத்தியோகத்தர்களால் முறைப்படி அறிவிக்கப்படாததால் அவர்களின் மரணத்தின் பின்னரும் ரூபா 1,024,841 கணக்கிலிடப்பட்டு அத்தொகை அக்கணக்குகளிலிருந்து பற்றுதல் செய்யப்பட்டுமிருந்தது.

**(ஆ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டம்**

(i) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் 2015 யூன் 08 ஆந் திகதிய திவிநெகும சுற்றறிக்கை இலக்கம் 07/2015 க்கமைய கம்பஹா மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பண்டங்களை விநியோகிக்கும்போது நலம்பெறுநர்களை தெரிவு செய்யும் விதம் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் அமையவில்லை. நலன்பெறுநர்களது நடவடிக்கைகள் தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் வழங்கப்படும் பண்டங்களும் உபகரணங்களும் நலன்பெறுனர்களுக்கோ அல்லது நாட்டிற்கோ பயனளிக்குமா என்பதைத் தெரிவிக்கும் மதிப்பாய்வு அறிக்கை எதுவும் பிரதேச செயலகங்களில் இருக்கவில்லை.

(ii) தொம்பே பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது 06 நபர்களுக்கு ரூபா 161,838 பெறுமதியான 06 ஜீக்கி மெஷின்கள் வழங்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அந்நபரகள்

அவற்றைப் பயன்படுத்தியமை தொடர்பாக பரிசீலித்தபோது அந்த உபகரணங்களின் மூலம் முறையாகப் பயன்பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

(iii) தொம்பே பிரதேச செயலகத்தில் 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது பொருட் கொள்வனவிற்காக ரூபா 4,848,705 செலவிடப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட பொருட்களின் மூலம் போதியளவு பெறுபேறுகளை நலன்பெறுனர்கள் பெற்றிராமை நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தால் பெருமளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பெறப்படுபவற்றை அவற்றைத் தேவையானவர்களைத் தெரிவு செய்து வழங்குவது பொறுப்பான உத்தியோகத்தர்களால் மிகுந்த கவனத்தில் கொள்ளப்படவேண்டுவதுடன், பொருட்களை வழங்குவதற்கு பதிலாக கிராமிய பொருளாதாரத்திற்கு மிகவும் இசைவானதும் மக்களது வாழ்க்கைத் தர உயர்வுக்குமான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாகவும் மேற்கொள்வது தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் மிகவும் உசிதமானதாகும் என நேரப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(இ) திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 07/2014 ஆம் இலக்க திவிநெகும சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நலன்பெறுனர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யும் நோக்குடன் திவிநெகும சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் நிதிசார் மற்றும் கடன் வசதிகளுக்குப் புறம்பாக, எதிர்பார்க்கப்படும் சீவனோபாய அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக சஹன அரண கடன் திட்டத்தின் கீழ் திவிநெகும நலன்பெறுனர்கள் பொருட்டு வழங்கப்பட்ட கடன் திட்டத்தின் மூலம் 04 பிரதேச செயலகத்தை சேர்ந்த 7,892 நலன் பெறுனர்களுக்கு ரூபா 194,415,115 கடனாக வழங்கப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் 3,782 நலன்பெறுனர்களிடமிருந்து ரூபா 51,835,091 நிலுவையாக இருந்தது. இக்கடனை அறவிடுவதற்கு போதிய பிணை பெறப்படாமையால் சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதிருந்தது.

(ஈ) மஹர பிரதேச செயலகத்தின் திவிநெகும சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் மூலம் பல்வேறு பணிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடனில் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு 74 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடனில் ரூபா 1,454,342 நட்டக் கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) வத்தளை பிரதேசத்தின் அதிகாரத்துக்குட்பட்ட திவிநெகும சமுதாய அடிப்படை வங்கி மூலம் பல்வேறு பணிகளுக்குமென வழங்கப்பட்ட கடனில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,684,640 காலம் கடந்த கடனாக இருந்ததுடன், ரூபா 3,509,286 நட்டக் கடனாக பதிவழிக்கப்பட்டுமிருந்தது.

(ஊ) கம்பஹா பிரதேச செயலகப் பிரிவில் 2016 ஆம் ஆண்டின் மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வீடுகளுக்கு ஏற்பட்ட சேதத்தை வெள்ளத்தின் பின்னர் வீடமைப்பிற்கு எனப் பூரணப்படுத்துகையில் மேற்கொள்ளப்பட்ட கிரய மதிப்பீட்டின் பிரகாரம் 394 வீட்டுத் தளபாட இழப்புகளுக்கு ரூபா 4,253,475 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த விண்ணப்பப் படிவங்களின் மூலப் பிரதிகள் இடர் நிவாரண சேவைகள் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும், 2017 ஏப்ரல் மாதமளிவிலும் ஏற்பட்ட இழப்பிற்காக கொடுபனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2 ஆண்டுகளைக் கடந்த 335 சந்தர்ப்பங்கள் தொடர்பான ரூபா 12,788,451 வைப்பு சம்பந்தமாக 571(2) ஆம் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 மார்ச் 23 ஆந் திதகியன்று தொம்பே பிரதேச செயலகத்திற்கும் 2016 சனவரி 08 க்கும் செம்டம்பர் 10 க்கும் இடையே 04 நாட்களின்போது வத்தளை பிரதேச செயலகத்திற்கும் கலாசார நடவடிக்கைகள் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 70,000 பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) சமூக பாதுகாப்பு அங்கத்தவர் நிதி 15 நாட்களுக்கு ஒரு முறை இலங்கை சமூக பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், தொம்பே பிரதேச செயலகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 8,860 பெறுவனவும் 2016 நவம்பர் வரையான ரூபா 26,572 பெறுவனவும் ஜாஎல பிரதேச செயலகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான 42 அங்கத்தவர்களது ரூபா 84,211 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான 09 அங்கத்தவர்களது பெறுவனவாகிய ரூபா 10,298 என்பனவும் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஈ) மஹர பிரதேச செயலகத்தின் பல்வேறு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 04 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 1,098,774 அச்செயற்திட்டங்களை நிறைவேற்றாது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) களணி பிரதேச செயலக ஓய்வூதியகாரர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்கு வங்கிக்கும் அஞ்சல் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட பணம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஓய்வூதியகாரர்களுக்கு வழங்கப்படாது 05 சந்தர்ப்பங்களில் மீளப்பெறப்பட்டு குறித்த தொகையாகிய ரூபா 449,847 பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டு பின்னர் அரசாங்க வருவாயிலிடப்பட்டிருந்தது.

(ஊ) பியகம பிரதேச செயலகத்திற்கு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகப் படியாக 2015, 2016 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 26,000 மற்றும் ரூபா 92,600 என்பன குறித்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படாது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 25601 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 14 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,064,925 கூட்டுத் தொகையான நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்நிலுவையானது 9 உத்தியோகத்தர்களின் 2 முதல் 5 ஆண்டு வரையிலானதும் 5 உத்தியோகத்தர்களின் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுமான காலப்பகுதிக்குரியவையாகும். அக்கடன் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(ஆ) திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பினது கூட்டுத் தொகை என்பவற்றுக்கிடையே ரூபா 119,659 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**3.4 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல், செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

தொம்பே பிரதேச செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 880,000 தொகையுடைய 03 செயற்திட்டங்கள் உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்தகாரர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் அமுலாக்கப்பட முடியாதிருந்தன.

**3.5 செயலாற்றல்**

கம்பஹா மாவட்டச் செயலக செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் வருமாறு.

**போதியளவு நிறைவேறாத பணிகள்**

மாவட்டச் செயலகத்தின் சில பிரதேச செயலகங்களில் பணிகள் போதியளவு நிறைவேற்றப்படாதிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் வருமாறு

(அ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் கமநெகும செயற்திட்டத்தின் கீழ் ஜாபாலவத்தை விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட ரூபா 250 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டின் போது ரூபா 2,021,952 செலவில் இரு கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. 2017 பெப்ரவரி மாதமளவிலும் அச்செயற்திட்டம் செயலற்றவாறிருந்ததுடன் அமைக்கப்பட்ட கிணறுகளும் பயன்படுத்தப்பட முடியாதவாறு அமைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2001-2016 காலப்பகுதியின்போது 05 பிரதேச செயலகங்கள் நிர்மாணித்திருந்த 23 சேவா பியச நிறுவனங்களும் இதுவரை பயன்படுத்தபடாதிருந்தன.

(இ) 1987 முதல் 2016 வரை 04 பிரதேச செயலகங்கள் நிர்மாணித்திருந்த 64 சேவா பியச நிறுவனங்கள் பயன்படுத்தப்பட்டபோதும் அவற்றினது நீர், மின்சாரம், சுகாதார வசதிகள் என்பன நிறைவேறாதிருந்தன.

(ஈ) நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் 2014 ஆம் ஆண்டில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட துன்கால்பிட்டிய சனசமூக மண்டபம் மற்றும் சேவா பியச என்பன ரூபா 9,100,000 மதிப்பீட்டிலானவையாகும். நிர்மாணிப்பதற்குச் செலவாகிய தொகை ரூபா 8,201,264 ஆகும். இவ்வேலைகள் 2015 மே 08 ஆந் திகதி நிறைவடைந்திருந்தன. 2017 மார்ச் மாதமளவில் வேலை முடிவடைந்து ஏறக்குறைய 2 ஆண்டுகளாகியும் இக்கட்டிடம் மக்களிடம் ஒப்படைக்கப்படாதிருந்தது.

(உ) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட தலாஹேன மாதர் விடுதியும் சேவா பியசவும் 2014 ஒக்டோபர் 09 ஆந் திகதி வேலை ஆரம்பமாகிய போதும் கட்டிட நடவடிக்கைகள் 2017 மார்ச் மாதமளவிலும் நிறைவேறாதிருந்தன. இதன் காரணமாக மிகவும் பழுதடைந்த நிலையில் தலாஹேன மாதர் சிகிட்சை நிலையத்தைப் புதிய கட்டிடத்தில் இயக்குவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் பல்வேறு அமைச்சுகளும் திணைக்களங்களும் பியகம பிரதேச செயலகச் செயற்திட்டங்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குமென வழங்கிய ரூபா 198,946 கூட்டுத் தொகையானது குறித்த பணிகள் நிறைவேறாமையால் 2016 ஆம் ஆண்டின் போது அரச வருவாயிலிடப்பட்டிருந்தது.

## 3.6 இழப்புகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 முதல் 2016 வரையான காலப்பகுதியின்போது 05 பிரதேச செயலகங்களது ரூபா 591,430 கூட்டுத் தொகையுடைய வாகன இழப்புகளை அறவிடமுடியாதிருந்ததுடன், ஒரு பிரதேச செயலகத்தின் வாகன விபத்து தொடர்பான இழப்பு கணிப்பிடப்படாதுமிருந்தது.

(ஆ) ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற உப தபாலதிபர் ஒருவருக்கு வத்தளை பிரதேச செயலகத்தால் ரூபா 454,918 ஓய்வூதியம் வழங்கப்பட்டு, பின்னர் தவறைப் புரிந்து கொண்டு தவணை ரீதியில் ரூபா 46,000 மீள அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த உத்தியோகத்தர் 2014 யூலை 31 ஆந் திகதி மரணமடைந்ததால் வினைத்திறனற்றதும் கவனமின்மையானதுமான உத்தியோகத்தர்களது செயலால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 408,918 என அவதானிக்கப்பட்டது. அரசிற்கு ஏற்பட்ட இவ்விழப்பை பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் பெண் கிராம உத்தியோகத்தரொருவரது கல்விச் சான்றிதழில் உள்ள குறைபாடுகள் நியமனம் வழங்கப்பட்டு 12 ஆண்டுகளின் பின்னரே தெரிய வந்துள்ளது.

(ஆ) 2014 யூலை 23 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சினது செயலாளரின் சுற்றறிக்கைப் பிரகாரம் 05 பிரதேச செயலகங்களில் 768 உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றிருந்தனர். அதில் 347 பேர் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றிராதவரகள் ஆவர்.

(இ) எட்டு பிரதேச செயலகங்களின் 120 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் 5051 குடும்பங்கள் அத்துமீறிய குடியேற்றவாசிகளாக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தொம்பே பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட அரசாங்க காணியில் அத்துமீறிக் குடியிருப்போர் தொடர்பாகப் பரிசீலினைகள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் அறிந்துகொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், 2016 பெப்ரவரி மாதமளவில் 07 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய 05 குடியேற்றத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட காணிக் கச்சேரியின் மூலம் 1995 க்கு முன்பிருந்தே அத்துமீறிக் குடியேறிய 93 நபர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

இருபத்தொன்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 33 குடியேற்றத் திட்டங்கள் இருந்ததுடன், இக்குடியேற்றத் திட்டங்களின் விஸ்தீரணமும் அவற்றில் குடியிருப்போரினது தகவல்களும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் அரச காணிகளில் குடியிருப்போருக்கு வழங்கப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வழங்கல் பத்திரம் (ஸ்வர்ண பூமி மற்றும் ஜயபூமி உரித்துறுதிகள்) சனாதிபதியால் கையொப்பமிடப்பட்டு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த உரித்தாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும், அவ்வாறு ஒப்படைக்கப்படாத 03 அனுமதிப்பத்திரங்கள் 2017 யூலை 12 ஆந் திகதியளவிலும் வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதினைந்து காணிகளில் வழங்கல் பத்திரத்திற்கு உரித்துடையவரை விட வெளி நபர்களும் அத்துமீறிக் குடியேறியிருந்தனர்.

(ii) ஏழு காணித்துண்டுகளுக்கு உரியவர்கள் மரணமடைந்திருந்தனர்.

(iii) பதினைந்து காணித் துண்டுகளில் வழங்கல் பத்திரங்களுக்குரியவர் மரணமாகியதையடுத்து உரிமையுள்ளோர் அவற்றில் குடியேறியிருந்தனர்

(iv) ஐந்து காணித் துண்டுகளின் வழங்கல் பத்திரங்களுக்கு உரித்துடையோர் அவற்றில் குடியேறியிருக்கவில்லை.

(v) காணித் துண்டுக்குரிய ஒருவருக்கு ஏற்கனவே வழங்கல் பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) மூன்று காணித் துண்டுகள் தொடர்பாக இதற்கு முன்னர் வேறு உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(vii) மூன்று காணித் துண்டுகளின் உரித்துறுதிகளின் காணித் துண்டுகளுக்குரிய இலக்கம், வரை படம் என்பன திருத்தஞ் செய்யப்படுவதற்காக அலுவலகத்தால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன், ஒரு காணித் துண்டின் பொருட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) கட்டான பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரச காணிகளில் வழங்கல் பத்திரமின்றி 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே 150 குடும்பங்கள் குடியேறியிருந்ததுடன், 2000 ஆம் ஆண்டிற்கு பின்னர் அக்குடும்பங்களது எண்ணிக்கை 108 ஆகியிருந்தது. அந்நபர்களது காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கோ அல்லது அவர்களை அங்கிருந்து அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(எ) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் ஒருவர் 02 போலிச் சான்றிதழ்களை வழங்கியமைக்காக 2012 மே 20 ஆந் திகதி வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். 2012 முதல் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அவ்வுத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இடர்க் கடன் மீதியாகிய ரூபா 107,170 ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்த போதும், அதனை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஏ) சுற்றாடல் பிரச்சினைகள்**

(i) மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் 24 செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புகார்களுக்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்வு காணப்படவில்லை. மேலும், குறித்த நிறுவனங்கள், நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் சம்பந்தமாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) மீரிகம பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் பின்வரும் சுற்றாடல் பிரச்சினைகள் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

- பெருமளவில் மண் அகற்றப்பட்டும் மணல் தோண்டப்படுவதும் விவசாயக் காணிகளில் மண் அகற்றப்படுவதால் மண்சரிவு அபாயம் ஏற்படும் நிலை உருவாவதுடன் மடகாவிட, வேவெல்தெனிய,

பமுனுவத்த ஆகிய பிரதேசங்களில் பெருமளவில் மண் அகற்றப்படும் இடங்கள் இனங்காணப்பட்டுமிருந்தன.

- வன வளங்கள் விரைவாகக் குறைவடைதல் மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் 1000 ஹெக்டயருக்கு அதிகமான வனாந்தர விரிவாக்கம் உள்ளபோதும் இவ்வன வளங்கள் விரைந்து அழிவுறும் போக்கு தென்படுகின்றது. திட்டமின்றி நிர்மாண வேலைகள் இடம்பெறுவதும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கெனக் காடுகளை அழிப்பதும் மரங்களைச் சூறையாடுபவர்களால் பாதுகாப்பான காட்டுப் பகுதி அழிவுக்குள்ளாகுவதும் போன்ற காரணங்களால் வன வளங்கள் விரைவாக அழிவடைவது தென்படுகின்றது.

- 16 எப் ஹலுகல பிரிவில் கற் குழிகளுக்கு அண்மித்த இடங்களில் சுற்றாடல் பிரச்சினைகள் பெருமளவில் நிலவுவதுடன் பிரதான வீதியில் நாளாந்தம் ஏறக்குறைய 200 லொறிகளில் கற்களை ஏற்றிய லொறிகள் பயணித்தவாறும் உள்ளன.

    - அதிக சூட்டினால் சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதுடன் வீடுகளும் அசுத்தமடைகின்றன.

    - கற்களை உடைப்பதால் நீர்ப்பற்றாக்குறை பெருமளவில் ஏற்படுதல்.

    - காட்டுப் பிரதேசம் வெட்ட வெளியாகுதல்.

    - கற் துகள்கள் வீடுகளில் விழுவதால் வீடுகள் பழுவடைவதுடன் கிராம வாசிகளும் காயங்களுக்கு உள்ளாகுதல்

    - இயந்திரங்கள் மூலம் கற்களை உடைப்பதால் பெருமளவு ஓசை ஏற்பட்டு அதன் மூலம் ஒலி மாசடைதல்.

    - மண் பாதிப்படைவதால் காணிகள் செழிப்பற்றுப் போதல்.

    - கற்களை உடைப்பதால் ஏற்படும் நில நடுக்கத்தால் கட்டிடங்கள் பாதிப்படைதல்.

உடைக்கப்பட்ட கற்களின் மீது நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகுதல். இப்பிரச்சினைகளை குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து அதற்கான தீர்வை பெற்றுத் தருவது உத்தியோகத்தர்களது கடமையும் பொறுப்புமாக இருந்தபோதும் இது வரை இது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(iii) அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் பின்வரும் சுற்றாடல் பிரச்சினைகள் நிலவின.

(அ) அத்தனகல்ல ஓயாவில் அசுத்த நீரும் கழிவுகளும் அகற்றப்படுதல்.

- றுவன்வல பிரதேசத்தின் இறப்பர் பால் தொடர்பான கழிவுகள் அத்தனகல ஓயாவில் அகற்றப்படுதல்.

- உனகஹதெனிய லலான் நிறுவனத்தினது கழிவுகள் அத்தனகல ஓயாவில் அகற்றப்படுதல்.

(ஆ) வத்துபிட்டிவல தொழிற்சாலை வெளியேற்றும் கழிவுகள் வயல்களுக்கும் நீரோடைகளுக்கும் யட்டியான மயானப் பிரதேசத்திற்கும் அகற்றப்படுதல்.

(இ) வேயாங்கொடை இராணுவ முகாமிலிருந்து வெளியேற்றப்படும் அசுத்த நீரும் கழிவுகளும் சுற்றாடலில் கலப்பதால் முகாமைச் சூழவுள்ள வீடுகளின் கிணற்று நீர் அசுத்தமடைதலும் நோய்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்குதலும்.

(ஈ) ஊராப்பொல பிரதேசத்தில் உள்ள வாகனச் சுத்திகரிப்பு நிறுவனத்தால் அசுத்த நீரும் கழிவுகளும் சூழவுள்ள வயல்களுக்கும் நீர்ப் பாதையிலும் அகற்றப்படுவதால் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுதல்.

(உ) 375 ஏ மீவிட்டிகம்மன மீகல்ல பிரதேசத்தில் கருங்கற்களை உடைப்பதால் கிணறுகளைத் தோண்டுகையில் நீர் ஊற்று தென்படாது குடியிருப்பாளர்கள் குடி நீர் பிரச்சினைகளை எதிர் நோக்குதல்.

(ஊ) 361 கொடகம பெதியாகந்த பாதுகாப்பு பிரதேசத்தில் வத்துபிட்டிவல முதலீட்டு வலயம் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளிலிருந்து கொண்டு வரப்படும் கழிவுகள் அகற்றப்பட்டு அவற்றை எரிப்பதன் காரணமாக பாதுகாப்புப் பிரதேசம் அழிவடைதல். நீர் ஊற்றுக்களில் கழிவுகள் சேர்வதால் நீர் ஊற்றுக்கள் அழிவடைதல். துர்நாற்றத்தால் பிரதேச வாசிகள் சுவாசக் கோளாறுகளுக்கு உள்ளாகுதல்.

(எ) வேகடகல்ல ஜய மாவத்தையில் கழிவு நீர்ப்பாதை தயாரிக்கப்படாமையால் அசுத்த நீர் வழிந்தோடாது வீதியில் அசுத்த நீர் பரவுவதால் வீதிகள் அசுத்தமடைவதுடன் இடைஞ்சல்களுக்கும் உள்ளாகுவதால் வீதிகள் பாழடைதல்.

(ஏ) மதுபானக் கடைகளின் வெற்றுப் பாத்திரங்கள் ஆங்காங்கே வீதிகளில் போடப்படுவதால் நீர் தேங்கி நுளம்புகள் பெருகுதல்.

(ஐ) வடக்குத் திஹாரிய மற்றும் கிழக்குக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகள் மற்றும் அறுவை நிலையங்கள் காரணமாக பிரதேசத்தில் துர்நாற்றம் அதிகரித்தல். நீர் ஊற்றுக்களில் கழிவுகளையும் அசுத்த நீரையும் அகற்றுவதன் காரணமாக நீரும் சுற்றாடலும் மாசடைதல்.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 47 | 45 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 22 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,051 | 2,677 | 374 |
| (iv) | ஆரம்ப நிலை | 121 | 105 | 16 |
| | மொத்தம் | 3,247 | 2,849 | 398 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 13 பிரதேச செயலகங்களில் 398 வெற்றிடங்கள் நிலவின.